
www.tamilarangam.net

# ஈரோஸ்



மேல் நாட்டில் இருந்து புரட்சியை இறக்குமதி செய்யாமல் எமது சொந்த நாட்டிற்கு பொருந்தக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்துவதே சிறந்ததாகும். மக்களை அரசியல்மயப்படுத்தி புரட்சிகரமான கருத்துகளை ஏற்படுத்தி அதன் மூலம் எமது பொது எதிரியான ஸ்ரீலங்கா அரசின் முதுகெலும்பான பொருளாதாரத்தை முறியடித்து அதன் மூலம் இராணுவத்தை தொடர்ந்து தாக்குவதன் மூலம் எதிரியை எமது சொந்த மண்ணில் இருந்து விரட்டியடித்தல் வேண்டும்.

நாம் ஈழவர்

நமது மொழி தமிழ்

நம் நாடு ஈழம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# புரொண்ட் லைன் பத்திரிகையில் ஈ.ரோஸ் பற்றி வந்த கட்டுரையின் மொழி பெயர்ப்பு.

ஈழப் புரட்சி அமைப்பானது குறிப்பிட்டளவு போராளிகளைக் கொண்டதாக இருந்தும் தனது உயர் தொழில் நுட்பத்தால் பெரும் பயனளிக்கக் கூடியதும், குறிப்பிடத்தக்கதாக செயல்திறன்களை ஸ்ரீலங்காவில் பொதுவாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அராஜகத்திற்கு எதிராக ஆற்றியமை தெளிவாகியுள்ளது.

ஸ்ரீலங்காவின் தலைநகரான கொழும்பிலும், கிழக்கு மாகாண மாவட்டமான திருகோணமலையிலும் வதியும் சிங்கள இனம் இந்த வருடத்து புனித பௌத்த வைகாசி பண்டிகையை விரைவில் மறந்து விடுவார்கள். சாதுரியமான முறையில் போராளிகளால் ஏற்படுத்தப்பட்ட கண்ணி வெடி மருந்துத் தாக்கம் பெரும் பீதியையுண்டாக்கியுள்ளது. பாரிய வெடித்தாக்கத்தினால் கொழும்பில் ஏயர் லங்கா விமானம் இரண்டாகப் பிளந்தமையும், மத்திய தந்திக் கந்தோர், சேதமடைந்தமையும், குளிர்பான போத்தல் களஞ்சியமும். பாரிய குண்டு வெடிப்பும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை சமாளிக்க முடியாமல் சிங்கள மக்களின் வரி, உயர்ச்சிக் கட்டத்தையடைந்து அரசு ஸ்தம்பித்து விட்டதோடு, அதற்கான காரணம் பயங்கரவாதம்

www.tamilarangam.net


னை பகிரங்கமாக ஏற்கப்பட்டுள்ளது. அத்துடன் நிலக் கண்ணி வெடித் தாக்குதலானது அரச படைகளை அழிப்பதுடன் பல வெளிநாட்டு பயிற்சிகளையும் நடவடிக்கைகளையும் பின்னடையச் செய்யும்.

ஸ்ரீலங்கா அரசு சகல தாக்குதல்களையும் பிரபாகரனைத் தலைவராகக் கொண்ட விடுதலைப் புலிகளை குற்றஞ் சாட்டிய போதிலும். ஆச்சரியத் தக்க வகையில் படிப்படியாக கொழும்பு, திருகோணமலை, அநுராதபுர பகுதி தாக்குதலுக்கு ஈ.ரோஸ் இயக்கம் தான் காரணம் என்பதனை இனங் கண்டுள்ளது. இதுவரைக்கும் குறைந்தளவு போராளிகளை கொண்டு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமுள்ளதுமானதும், மதிநுட்பமான வெற்றிகரமானதுமான தாக்குதல்களை முன்னெடுத்து சென்றுள்ளது. மேற்படி தாக்குதல்கள் தலைநகரத்தில் மனோரீதியான ஒரு பதட்டத்தையும் குழப்ப நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

## பகிரங்கமற்ற பங்களிப்புகள்:-

இத்தனை வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈ.ரோஸ் எதிர்பாராத வெற்றிகளை போராளிகள் மத்தியில் சாதித்துள்ளது. இது தனது நடவடிக்கைகளை பகிரங்கப்படுத்தாத வகையில் (THE DARK HORSE) ஈ.ரோசின் வெற்றிக்குப் பெரும் கீர்த்தியை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் விமானத் தாக்குதலுக்கும், மத்திய தந்திக் கந்தோர் தாக்குதலின் பின்னர் அரசின் சந்தேகம் விடுதலைப் புலிகள் மீது இருந்தது மட்டுமல்லாமல் அரசின் சாதகங்களுக்கு ஒரு சாணக்கியமாக கருதப்பட்டது. அதனால் அரச படை பயத்திற்கு மத்தியிலும் திட்டமிட்டு யாழ் பிராந்தியத்தை கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வர பெருந் தாக்குதலை மேற் கொண்டது. ஆனால். ஈ.ரோஸினது மதி நுட்பமான தாக்குதலை தொடர்ந்தும், தொடர்ச்சி படுத்தியும் பரவலாகத் தாக்கியதால் அரசின் முற்றுகையை இலகுவாக முறியடிக்கக் கூடியதாக அமைந்தது

பங்குனிமாதம் மட்டக்குளியாவில் வாயு உற்பத்தி சாலை குண்டு வெடிப்பு, கொலன்னாவைத் தாக்குதல், அதையடுத்து அநுராதபுரத்தில் அரச கட்டுத்தாபன எண்ணெய்க் களஞ்சிய தகர்ப்பும் அத்துடன் கொழும்பில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளும், அதனைத் தொடர்ந்து திருகோணமலையில் அதிரடி கடற்படைகள் மீது அதிரடித் தாக்குதல் என்பன இவற்றில் அடங்கும்.

ஈ.ரோஸின் மேல்மட்டத்தில் அங்கம் வகிக்கும் திரு பாலகுமார், சங்கர் ஆகிய இருவரும் சென்னையில் அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறுகிறார்கள். இதுவரை காலமும் எமது போராளிகள் தான்

www.tamilarangam.net


மிகவுஞ் சிறமையான ஒன்று வெடிப்பு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். நாங்கள் எமது போராளிகளை நேரடியான தாக்குதல்களை ஏற்படுத்தி இன்னமும் உண்மையான பலத்தை காட்டவில்லை. அரசியல் கொள்கைகளையும், சரித்திர வரலாற்று உண்மைகளையும் போராட்ட தந்திரோபாயங்களையும் கருத்தில் கொண்டு ஈ.ரோஸ் இயக்கமானது வழமைக்கு மாறான ஒரு விதமான கட்டுத் தலைமையின் கீழ் இயங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

நாங்கள் ஒரு திடீர் போராட்ட ஆக்கிரமிப்பாளர்களோ, வெடி குண்டு நிபுணராகவோ அல்லர். மாறாக ஈ.ரோசானது இலண்டன் மாநகரில் 1975ல் திரு இரத்தின சபாபதி அவர்களால் உருவாக்கப்பட்டது, தொடக்கம் ஒரு தெளிவான மார்க்ஸீச, லெனினீசக் கொள்கைகளை அடிப்படையாக முன் வைத்து ஈழ தமிழர் பிரச்சனைகளை தீர்ப்பதற்குத் தெளிவான கருத்தைக் கொண்டுள்ளது. ஈ.ரோசின் கொள்கையின் படி ஒரு முழுமையான அரசியல் விஞ்ஞானபானங்களை வடக்கு, கிழக்கு வாழ் மக்களோடு தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கியுள்ளது. ஈழப் பிரச்சனையில் பாட்டாளி வர்க்கத் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு முக்கியமான பங்கை வகிப்பதாலும் அவர்கள் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்வதாலும், அவர்களுடைய பிரச்சனைகள் முதற் கடமையாக தீர்க்கப்பட வேண்டும் என ஈரோஸ் நம்பிக்கை கொண்டுள்ளது. பருத்தித்துறை தொடக்கம் பதுளை (மலையகம்) வரைக்கும் மன்னார் தொடக்கம் மட்டக்களப்பு வரைக்கும், பொத்துவில் உள்ளடங்கிய பிரதேசம் எங்கள் தாயகமாகும். அதனால் தான் இப்பகுதியை "ஈழம்" என அழைக்கின்றோம். நாங்கள் திட்டவட்டமாக நம்புகின்றோம், மலையகத் தமிழ் மக்களும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களும் ஒருங்கிணைந்து ஒரே கணிப்பின் கீழ் தமிழர்கள் என்று கணிக்கப்படல் வேண்டும். எங்கள் போராட்டமானது மலையகத்தில் தொடங்கியது ஸ்ரீலங்காவின் சரிபாதி ஏற்றுமதி வருமானம் தோட்டத்தில் இருந்து தான் பெறப்படும். தமிழ் பாட்டாளி வர்க்கத்தின் முதுகெலும்பு இந்த தோட்டத் தொழிலாளர் தான். நாங்கள் திடமாக நம்புகின்றோம் ஈழப் போராட்டமானது, மலையக மக்களை உள்ளடக்கியதுடன், வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் விவசாய, ஏழைத் தொழிலாளர்களுடன் இணைந்த போராட்டத்தினூடு தான் ஈழம் பெறமுடியும் என திரு பாலகுமார் கூறினார்.

நாங்கள் ஈரோசிற்கான போராட்டத்தை தனியே இராணுவ நடவடிக்கை மூலம் கொடுக்க முடியும்

www.tamilarangam.net



என்றால் அதனை ஆரம்பத்தில் இருந்தே சரியாகச் செய்திருப்போம். ஆனால் நாங்கள் முதலில் மக்களை அரசியல் மயப்படுத்தி, புரட்சிகரமான கருத்துக்களை ஏற்படுத்தி அதன் மூலம் யார், யார் எதிரி, புரட்சிகர நடவடிக்கை எதற்காக எதற்காகப் போராடுகின்றோம் என்றும். இந்த சிறு ஆயுத நடவடிக்கைகள் மூலம் அரசியல் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வருதல். திரு சங்கரின் கூற்றுப்படி மேல் நாட்டிலிருந்து நேரடியாக புரட்சியை இறக்குமதி செய்யாமல். எமது சொந்த நாட்டிற்குப் பொருந்தக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்துவது, ஈ.ரோசைப் பொறுத்தளவில் ஸ்ரீலங்கா அரசின் முதுகெலும்பான பொருளாதாரத்தை முறியடித்து அதன் மூலம் ஸ்ரீலங்கா இராணுவத்தை தொடர்ந்து தாக்குவதன் மூலம் விரட்டியடிப்பதாகும்.

முதலாவதாக:- சங்கரின் கூற்றுப்படி, இராணுவ ரீதியாக எடுத்துக் கொண்டால் வெளிநாட்டில் மிகவும் வளர்ச்சியடைந்த விடுதலை அமைப்பு ஒன்றின் பாசறையில் பயிற்சி எடுத்த முதல் இராணுவப்பிரிவு ஈ.ரோஸ் தான். ஈ.ரோஸ் ஆனது 1983ம் ஆண்டு யூலை மாதம் தமிழர்கள் மீதான திட்டமிட்ட படுகொலையை அடுத்து நிலைமைகளுக்கு ஏற்றமுறையில் தனது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. நூறு வீதம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் எமதே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதால் 100% செலவில்லாமல் தமிழ் மக்கள் வாழும் கிழக்கு மலையகப் பகுதிகளில் தனது கவனத்தை செலுத்தியது. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை, மலையகம் அத்துடன் தென்னிலங்கையிலும் அவர்களின் முழுக் கவனமும் கிழக்கிலும் தெற்கிலும் இவர்களுடைய தாக்குதல்களில் குறிப்பாக தெற்கில் உள்ள பொருளாதார கேந்திர நிலையங்களை நாசகார வேலை மூலம் ஸ்தம்பிதம் அடையச் செய்தல், அத்துடன் கிழக்கில் சில கொரில்லாத் தாக்குதல் மூலம் கண்ணிவெடி, இராணுவத்தின் மீது ஆக்கிரமிப்பு போன்ற நடவடிக்கைகளையும் மேற் கொண்டுள்ளனர்.

கிழக்கில் இவர்களின் தந்திரோபயத்தினில் ஒரு புது விதமான மூலோபாயத்தை ஏற்படுத்தியுள்ளனர். இராணுவத்தை உசார்படுத்தாமல், தமிழ் மக்களை கொலை செய்தும், கொள்ளையடித்த பின்னர் இராணுவத்தினர் முகாமுக்கு திரும்பும் போது இடங்களை தெரிந்தெடுத்து தாக்குவதாகும். இப்படியாக மட்டக்களப்பில் செங்கலடி, கொடுவாமடு மற்றும் பல இடங்களில் 1985ல் 11 பெரிய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. சித்திரை மாதம் 1985ம் ஆண்டு மட்டக்களப்பில் கண்ணி வெடித் தாக்குதல் மூலம் பாக்கிஸ்தானில் பயிற்சி பெற்ற விசேட அதிரடிப்படை பொலிசார் 49 பேர் கொல்லப்பட்டனர். இதன் ஆரம்பத் தாக்குதல்கள் 1984ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பொது மக்கள் பலியாகதவாறு திட்டமிட்டு சாதிக்கப்பட்டது, குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருமானத்தை குறைக்கும் பொருட்டும் யூ.எஸ்.ஏ எம்பசியில் இஸ்ரேல், ஸ்ரீலங்கா தொடர்புகளுக்காக காரியாலயம் திறக்க இருந்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக 28 யூன் 84ம் ஆண்டு கொட்டல் ஒப்ரோயில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஸ்ரீலங்கா பாதுகாப்பு மந்திரியாகவுள்ள திரு அத்துலத் முதலியின் காரியாலயத்திற்கு வைக்கப்பட்ட குண்டு கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கப் பண்ணப்பட்டது. ஐப்பசி மாதம் 84ல் கோட்டை புகையிரத நிலையத்திலும், அதையடுத்து பஸ் தரிப்பு, வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் வீடமைப்பு காரியாலயம் போன்ற இடங்களில் தொடர்ந்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதே மாதம் கொழும்பு துறைமுகத்திலும், சப்புஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திலும் ஏற்படுத்தப்பட்ட குண்டு வெடிப்பு எதிர்பார்த்தளவில் பாதிப்பை உண்டுபண்ணவில்லை.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 18ந் திகதி திம்புவில் நடந்த பேச்சு வார்த்தையும் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் ஸ்ரீலங்கா அரசு தனது பாதுகாப்பு நடவடிக்கைகளையும், இராணுவ நடவடிக்கையையும் விஸ்தரிக்கவும் பலப்படுத்தவும் தான் உதவியது. இதனை பயன் படுத்தி வடக்கில்

www.tamilarangam.net



என்ன நடந்தாலும். கொழும்பில் அசாதரணமாக இருந்தது. இதனை ஈ.ரோஸ் கணக்கில் எடுத்து தலைநகரில் தொடர்ந்தும் தொடர்பு படுத்தப்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டால் வடக்கிலும். கிழக்கிலும் அரச படைகளால் ஏற்படுத்தப்பட்ட பன்முனை நெருக்கை சாத்தியமற்றது, என திரு சங்கர் கருத்து தெரிவித்தார். அத்துடன் தமிழ் மக்கள் மீதான பயங்கரவாதம் தனிப்பட்டதல்ல கொழும்பு வட்டாரங்களும் அறிய வேண்டும் என்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது.

**புதிய சாதனைகள்:-** இந்த விதமாக 1986 பங்குனி 18ந் திகதி புதிய விதமான தொடர்ச்சியான தாக்குதல்கள் சிலோன் ஒக்சிசன் கொம்பனியில் தொடங்கி சித்திரை மாதம் 10ந் திகதி தலைமன்னாரில் ஏற்படுத்தப்பட்ட நிலக் கண்ணி வெடித் தாக்குதலில் ஒரு பொலிஸ் மேலதிகாரியுடன், ஒரு பொலிஸ் கான்ஸ்ரபிளும் ஒரு பிரஜையும் இறந்துள்ளனர். இதை அடுத்து சித்திரை 25ந் திகதி அநுராதபுரத்தில் உள்ள அரச கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எண்ணெய் குதங்கள் 9 குண்டுத் தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டு தொடர்ந்து 3 நாட்கள் எரிந்துள்ளது. இதில் 9 பேர் இறந்ததோடு இலங்கை அரசுக்கு 35 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஈ.ரோசின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டது. மே 3ந் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஏயர் லங்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விமானத்தில் வைக்கப்பட்ட 50 கிலோ வெடி மருந்து வெடித்தால் விமானம் இரண்டாகப் பிளந்து 16 உல்லாசப் பிரயாணிகள் பலியாக்கப்பட்டனர் இவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பியர்கள் ஆவார். இதையடுத்து சரியாக 96 மணித்தியாலங்களில் ஈ.ரோஸ் தற்கொலைப்படையினர் மத்திய தந்திக் கந்தோரில் ஏற்படுத்திய குண்டு வெடிப்பு தாக்குதலில் தந்திக் கந்தோர் பலத்த சேதமடைந்ததுடன் 12 பேர் வரை இறந்துள்ளனர். தொடர்ந்து கிழக்குப் பகுதியில் திருகோணமலையில் உள்ள பண்றைட்டு கூட்டு சீமெந்து தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலினால் தொழிற்சாலை முற்றாக செயலற்று போனதுடன் 30 மில்லியன் (300 இலட்சம்) ரூபா வரை அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆலையின் இயந்திர பகுதியில் மேற்கொண்ட நாசகார வேலையால் நாட்டின் பொருளாதாரத்திற்கும், வெளிநாட்டு முதலீட்டிற்கும் ஒரு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்று கூட்டுத்தாபன ஊழியர் கூறியுள்ளார்

மீண்டும் கொழும்பு:- மீண்டும் ஈ.ரோஸ் இயக்கத்தால் மே 30ம் திகதி சிலோன் குளிர்பானத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் போத்தல் அடைக்கும் இயந்திரம் சேதமடைந்துள்ளது. இச் சம்பவம் ஸ்ரீலங்கா தரைப்படை, ஆகாயப்படை தலைமைக் காரியாலயத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து 200 மீற்றர் தொலைவிலும், அத்துடன் ஜனாதிபதி மாளிகையின் வாசல்தலத்திலிருந்து 2 கிலோ மீற்றர் உட்பட்டதாகும். இத்தாக்குதலில் 9 பேர் மாண்டுள்ளனர். இதே தினத் தன்று திருகோணமலை - மூதூருக்கு அருகாமையில் பாலந்தோப்பூர் என்ற இடத்தில் பதித்து வைக்கப்பட்ட கண்ணி வெடியில் இ.போ.ச பஸ்ஸில் பிரயாணம் செய்த 30 இராணுவத்தினர் அகப்பட்டு மாண்டனர். மறு தினம் மே 31ந் திகதி கொழும்புக் கருகாமையில் மீண்டும் மேற்கொண்ட தாக்குதலில் மட்டக்களப்பு - உதய தேவி வியாங்கொடைக்கு அருகாமையில் சேதமடைந்தது. மொத்தம் 5 பெட்டிகள் சேதமானது. இதில் கூடுதலாக அரச கூலிப்படைகளே பிரயாணம் செய்தனர்.

ஈ.ரோஸ் தனது கூர்மையான நடவடிக்கையால் இந்த வருட ஆரம்பத்தில் தை மாதம் 18ந் திகதி முல்லைத் தீவில் சந்தேகத்திடமாக வந்த பிரித்தானிய பத்திரிகையாளரான 62 வயது பெண்மணியான திருமதி வில்லியை தடுத்து வைத்தனர். ஒரு மாதத்தின் பின்னர் பிரித்தானிய ராஜதந்திரியின் தூண்டுதல் காரணமாக ஸ்ரீலங்கா அரசாங்கம் ஈ.ரோஸின் வேண்டுகோளுக்கு (சர்வதேச சங்கப் பிரதிநிதியை) சந்திரா சிங்களை வரவழைத்து அவர்களிடம் தமிழ் அகதிகள் முகாம் ஒன்றில் வைத்து கையளிக்கப்பட்டார். மேற்படி ஈரோஸின் நடவடிக்கைகள் திட்ட வட்டமான

www.tamilarangam.net



அரசியல் காரணத்துடன் செய்யப்பட்டுள்ளதாக திரு பாலகுமார் கூறியுள்ளார். ஏன் எனில் ஜெயவர்த்தன தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஒரு முடிவு கொண்டு வருவாரா இல்லையா என்பதை எடுத்துக்காட்டுவதற்குமாகும். ஆனால் மேற்படி நடவடிக்கைகள் ஈ.ரோசானது வடக்கு கிழக்கு மலையகப் பகுதிகளை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்து எமது தாயகமாக கருதக்கூடியதாகவுள்ளது என்றும் கூறியுள்ளார்.

கொழும்பு - திருகோணமலையில் அரசின் பொருளாதார கேந்திர ஸ்தானங்களை வெடிகுண்டின் தாக்குதலால் ஏற்பட்ட விளைவுகளை பார்க்கும் போது ஈ.ரோசின் திறமையை காணக்கூடியதாக உள்ளது.

இதன் கூட்டுத்தலைமை இயக்க அமைப்பு முறையில் செயற்திறனையும் கவனிக்க கூடியதாக உள்ளது. பாலகுமார், சங்கர் ஆகியோர் விளக்கும் போது, உலக நாடுகளில் உள்ள விடுதலைப் போராட்டத்தை அறிந்து அத்துடன் எமது பிரச்சனைகளையும் அறிந்தும், படித்தும் வந்துள்ளோம். தனி நபர் தலைமைத்துவம், சில வேளை தனி நபர் வாதம், கதாநாயகன் வேடம் போன்றவை சில வேளை தனி ஒருத்தரில் மாத்திரம் நம்பிக்கை போன்றவற்றை உருவாக்கும். இப்படியான சம்பவங்கள் ஈ.ரோசில் ஏற்படக்கூடாது அதனால் நாங்களே ஒரு கூட்டுத் தலைமையை உருவாக்கி அதனூடு செயற்படுகின்றோம். அதற்குரிய பலனையும் கண்டுள்ளோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நாங்கள் எமது அமைப்பில் ஒரு பதவி மோகத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. அதனால் எமது குறிக்கோளில் இருந்து விலகாமல் பார்த்துக் கொள்ளலாம். நாங்கள் இவ் வழிமுறைகளை எங்களுக்குள்ளே நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இதன் அதிகாரம் மிக்க தீர்மானங்களை உருவாக்குவது பொது ஆணைக்குழுவாகும். என்றும் அதன் அங்கத்தவர்கள் ஸ்ரீலங்காவில் வடக்கு, கிழக்கு, மலையக பகுதிகளிலேயே பணியாற்றுகின்றார்கள். இவர்களுடன் மூன்று பேரைக் கொண்ட புரட்சிகர நிறைவேற்றுக் குழுவானது சங்கர், பாலகுமார், தேசன் ஆகியோரை உள்ளடக்கியதாகும் இந்த அமைப்பானது கிராமியக் குழுக்களாகவும், மாவட்ட பிராந்திய குழுக்களாகவும் அடிமட்டத்திலிருந்து மேல் மட்டமாக தொடர்புடையதாக செயல்படுகின்றார்கள். இதன் அரசியல் இராணுவப் பிரிவினரும் இணைந்து காணப்படுகின்றனர்

## நிலை குலைந்த அரசின் நிலை:-

அண்மைக் காலத்தில் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட விளைவுகள் ஸ்ரீலங்கா இராணுவத்தையும், தலை நகரில் உள்ள அரசியல் மட்டத்திலும் மனோரீதியான பதட்டத்தையும் நிலை குலைந்த தன்மையையும் ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிராக தரை, ஆகாய, கடற்படை தாக்குதல்களை மேற்கொள்ள முற்பட்டனர். இருந்தும் ஸ்ரீலங்காவின் உளவுப் படையானது மொசாட், சின் பெத், எஸ்.ஏ.எஸ் கூலிப் படை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


களையும் உதவிகளையும் பெற்றும் போராளிகள் கொழும்பு வந்து பிரமிக்க தக்க தாக்குதல்களை ஏற்படுத்துவதை தடுத்து நிறுத்த முடியவில்லை. இதனை உணர்ந்து ஒரு அவ நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மனோரீதியான தாக்கங்கள் தான் அடிப்படையாக தேவைப்படுகின்றது என்பதை உணர்ந்து ஈ. ரோசானது பொறுப் பேற்று நடத்தியுள்ளது.

T. சுப்பிரமணியம்

- சென்னை -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# EROS the dark horse

OBSERVES 'FRONTLINE'

The Eelam Revolutionary Organisation, the hitherto underestimated, low-profile militant group, has clearly emerged as a significant actor in the prevailing military situation in Sri Lanka with its 'high-tech,' 'high-yield' 'high-visibility' operations.

EROS
DOCUMENTATION UNIT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்